

December 2025

# PREMA ANANDA VAHINI

# பிரேம ஆனந்த வாகினி

டிசம்பர் 2025

## பொருளடக்கம்


2. சுவாமிஜியின் சத்சங்கம் ~ உங்களுடைய எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடுங்கள்!

7. உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனச் செய்திகள்

10. ஆசிரமத்தில் சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

11. சுவாமிஜியுடன் எனது அனுபவங்கள் ~ திரு. சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள்

15. ஆசிரம விழாக்கள் நாட்காட்டி

16. இளைஞர் சங்கச் செய்திகள்


*“நீங்கள் விரும்பியபடி வாழலாம். ஆனால் நான் உங்களுக்கு ஒரு நல்ல பாதையக் காட்டவும், நல்ல அறிவை வழங்கவும், உங்கள் பிரச்சினைகளையும் சிரமங்களையம் தீர்க்கவும் விரும்புகிறேன். அதனால் நீங்கள் இந்தப் பாதையில் திறம்பட பயணிக்க முடியும்.”*

*~சுவாமிஜி*



“நாம் அதிகம் பேசாமல், ஏதேனும் ஒரு செயலைச் செய்வோம். நாம் நம் உலகிற்கு நன்மை செய்யும்போதுதான், அது ஒரு சிறந்த இடமாக மாறும். நாம் மற்றவர்களை மகிழ்ச்சியடையச் செய்வோம். அதன் மூலம் திருப்தியையும், பலவிதமான நற்செயல்களைச் செய்வதற்கான உத்வேகத்தையும் பெறுவோம். ஒவ்வொரு கிளை ஸ்தாபனத்திலிருந்தும் வரும் பக்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த பூமியில் உள்ள உயிர்களுக்கு உதவ ஒரு திட்டத்தை வகுப்போம். அது ஒரு பெரிய திட்டமாகவோ அல்லது சிறிய திட்டமாகவோ இருக்கலாம். உலகிற்கு நன்மை செய்ய எனக்கு உதவுமாறு நான் உங்களுக்கு விடுக்கும் அழைப்பு இது. இந்த அனுபவத்தின் மூலம் மிகுந்த ஆன்மிக சக்தி உங்களுக்குக் கிடைக்க, உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.”



# சுவாமிஜியின் சத்சங்கம்

## உங்களுடைய எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபடுங்கள்!

*(பின்வரும் சத்சங்கத்தை 1994ம் ஆண்டு, மார்ச் 3ம் தேதி ஆசிரமத்தில் வைத்து சுவாமிஜி வழங்கினார்)*

### ஹரி ஓம்!



நாம் அனைவரும் முகத்தில் புன்னகையுடனும், உள்ளத்தில் ஆனந்த உணர்வுடனும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். நமது மனம் தூய்மையாக இருந்து, நாம் வஞ்சகம் இல்லாதவர்களாக இரந்தால், உள்ளுக்குள்ளேயே நாம் புன்னகைக்க முடியும்.

நாம் அடிக்கடி கவலைகளையும் துயரங்களையும் சந்திக்கிறோம். சிரமங்களையும் எதிர்கொள்கிறோம். ஆனால், நமது பிரச்சினைகள் அனைத்திலிருந்தும் விடுபடுவதற்கு ஒரு வழி இருக்கிறது. அந்தச் சுதந்திரம் எங்கே இருக்கிறது? அதை நாம் எப்படி கண்டடையப் போகிறோம்? இந்தச் சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும் பல எளிய வழிகள் உள்ளன.

நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி, அதாவது கடவுள் இருக்கிறார் என்பதை நீங்கள் நம்ப வேண்டும். இந்த உலகில், மக்கள் இந்த சக்தியை வழிபடுவதற்குப் பல வழிகள் உள்ளன. மேலும் நாம் வழிபடும் முறையும் நமது பிரார்த்தனைகளும் நமது நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப மாறுபடும்.

கிறிஸ்துவர்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் மற்றும் இந்துக்கள் வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். ஆனால், இந்த வெவ்வேறு மதங்கள் அனைத்தின் சாராம்சம் என்ன என்பதைப் பற்றி நீங்கள் ஆழமாகச் சிந்தித்தால், அவை அனைத்திலும் அது ஒன்றாகவே இருப்பதைக் காண்பீர்கள்.

நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டின் சில அம்சங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இதற்குக் காரணம், மதத் தலைவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் பிறந்தவர்கள். அப்போதும் மக்களின் நடத்தை முறைகளும் பழக்கவழக்கங்களும் வேறுபட்டிருந்தன.

ஆனால், இந்த மதத் தலைவர்கள் அனைவரும் கூறியதன் நோக்கம், மக்களை உண்மையான மனிதர்களாக வாழத் தூண்டுவதும் ஊக்குவிப்பதுமே ஆகும். இந்த உலகில் உள்ள மனிதர்கள் பார்ப்பதற்கு மனிதர்கள் போல இருக்கலாம். ஆனால் அவர்களின் நடத்தைகள், கலாச்சாரங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் மனிதர்களுக்கு உரியவை அல்ல. வெளித்தோற்றத்தில் அவர்கள் மனிதர்களைப் போல் இருந்தாலும், அவர்களின் எண்ணங்களும் செயல்களும் உண்மையாகவே மனிதத்தன்மையற்றவை. எனவே, அவர்கள் மனிதப் பிறவி எடுத்தது பயனற்றது.

உங்கள் பிறப்பின் நோக்கம் என்ன? நீங்கள் ஒரு மனிதராகப் பிறந்ததற்கான காரணம் என்ன? நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் வாழ்வீர்கள்? நீங்கள் வழக்கமாக மற்றவர்களிடம் கேள்விகளைக் கேட்பதற்குப் பதிலாக, இது போன்ற பல கேள்விகளை உங்களிடமே கேட்டுக் கொள்ள வேண்டும். உங்களுடைய உடம்பையும் மனதையும் பாருங்கள் — உங்களுக்குள் ஒரு வேறு உலகம் இருக்கிறது; அதை நீங்கள் பார்க்கவில்லையா?

"மற்றவர்களுக்கு தன்னலமற்ற சேவை செய்யும் மனம் உங்களுக்கு இருக்க வேண்டும்–இது மிக அவசியம். நீங்கள் பெறும் கல்வி உங்கள் அறிவை மேம்படுத்த வேண்டும். அதே நேரத்தில், சமூகத்தில் மரியாதை பெற்று வழ்வதற்கு நல்ல பழக்கவழக்கங்களும் நல்ல வாழ்க்கை முறையும் அவசியம்."

உங்களுக்குள் இருக்கும் உண்மையை நீங்கள் ஏன் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை? இதற்குக் காரணம் நீங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள். ஆன்மிகத்தையும் சனாதன தர்மத்தையும் உங்களுக்கு வெளியே எங்கேயோ தேடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குள் இருக்கும் உண்மையை கண்டுபிடித்து அதை உணருவதற்கு உங்களுக்கு உதவி செய்வதற்காகவே நான் வந்திருக்கிறேன். இப்பொழுது, உங்களுக்குள் உண்மை, தெய்வீகம், ஞானம் அனைத்தும் உங்களுக்குள்ளேயே இருந்தாலும், அவை உங்களுடைய உறவினர்கள், சொத்து மற்றும் லௌகீகம் போன்ற உலகப்பற்றுகளுக்குப் பின்னால் மறைந்துள்ளது. பணம் மற்றும் நவீன உலகின் பழக்கவழக்கங்களின் தாக்கம் உங்களிடமுள்ளது. உங்களுக்கு பணம், மரியாதை அல்லது அறிவு போன்றவை தேவையில்லை என்று நான் கூறவில்லை — இவையனைத்தும் தேவையானப் பொருட்கள் தான். எனினும் தேவைக்கேற்ப சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் கற்றுக் கொண்டு பட்டம் பெறுவதற்காகப் படித்தீர்களா, அல்லது நீங்கள் ஒரு படித்தவர் என்று தற்பெருமை காட்டிக் கொள்வதற்காகப் படித்தீர்களா? ஒரு படித்தவராக, நீங்கள் பெருமை பாராட்டவோ அல்லது கர்வம் கொள்ளவோ கூடாது. ஒரு வேலை செய்து பணம் சம்பாதிப்பதற்காக மட்டும்தானா உங்களைப் பயிற்றுவித்துக் கொண்டீர்கள்? இல்லை, அறிவைப் பெறுவதற்கு கல்வி அவசியம். அதேபோல், இந்த உலகில் வாழ்வதற்கு, உடை மற்றும் இருப்பிடத்தை வாங்க நமக்கு பணம் தேவைப்படுகிறது. இன்று நீங்கள் வந்து என்னைப் பார்க்க விரும்பினால், நீங்கள் ஒரு விமான டிக்கெட் வாங்க வேண்டும். ஆசிரமத்தில் சிறிது நேரம் செலவிட உங்களுக்குச் சில வசதிகள் தேவை. அதற்கும் பணம் தேவை. சில நல்ல தொண்டுகளைச் செய்வதற்கும் பணம் தேவைப்படுகிறது. ஆனால் உங்கள் பணத்தை சிகரெட் மற்றும் மதுபானம் போன்றவற்றுக்காக வீணடிக்கவும் முடியும். நாம் இந்த உலகில் வாழ்வதற்கும் ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்வதற்கும் சில குறிப்பிட்ட விஷயங்கள் தேவைப்படுகின்றன. உங்களுக்குத் தேவையானதைப் பெறுவதிலிருந்து நான் உங்களைத் தடுக்க மாட்டேன்; அது தேவையில்லை என்றும் நான் சொல்ல மாட்டேன்.

உங்களுக்குத் தேவையானது தேவைத்தான். ஆனால், அதற்கு மேல் இருப்பது அவசியமில்லை. எந்தவொரு பொருளும் அதிகமாக இருப்பது உங்கள் மனதில் குழப்பங்களை உருவாக்கும். போதுமான அளவு இல்லாததும் குழப்பங்களை ஏற்படுத்தும். பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி — இரண்டு வழிகளிலும் அது உங்களைத் தொந்தரவு செய்யும். எனவே,

‘இது இப்போது போதும்’ என்று சொல்லும் விழிப்புணர்வு நமக்கு வேண்டும். மக்கள் கோடிக்கணக்கிலோ லட்சக்கணக்கிலோ பணத்தைச் சேமித்து வைக்கலாம். ஆனால் அவர்கள் இறந்த பிறகு அந்தப் பணத்திற்கு என்ன நடக்கும்? அது தங்கள் குழந்தைகளுக்குச் செல்லும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அது அவர்களைக் கெடுப்பதற்கு மட்டுமே பயன்படும். எனவே, உண்மையில் தேவைப்படுவது மட்டுமே அவசியம். மற்றவர்களுக்கு தன்னலமற்ற சேவை செய்யும் மனம் உங்களுக்கு இருக்க வேண்டும்—இது மிக அவசியம். நீங்கள் பெறும் கல்வி உங்கள் அறிவை மேம்படுத்த வேண்டும். அதே நேரத்தில், சமூகத்தில் மரியாதை பெற்று வழ்வதற்கு நல்ல பழக்கவழக்கங்களும் நல்ல வாழ்க்கை முறையும் அவசியம்.

மனிதர்கள் ஒருவரையொருவர் மதிக்க வேண்டும்; இதுவே ஒரு சிறந்த வாழ்க்கை முறையாகும். மனிதர்கள் ஆறாம் அறிவுடன் பிறக்கிறார்கள். எனவே, அவர்கள் அந்த ஆறாம் அறிவை வளர்த்துக் கொண்டு தங்கள் அறியாமையைப் போக்க வேண்டும். நீங்கள் கடவுளை நேக்கிய உண்மையான ஆன்மிகப் பாதையைப் பின்பற்றும் போது, மனம் வெளி உலகத்திலிருந்து போதுமான அளவு அனுபவித்து விட்டது என்ற நிலையை அடைய வேண்டும்; உங்களிடம் இருப்பது போதுமானது என்று நீங்கள் உணரும் நிலையை அடைய வேண்டும். அப்போது, ‘ஆம், என்னிடம் இருப்பது போதுமானது. என்னிடம் இருப்பதைக் கொண்டு நான் திருப்தி அடைகிறேன்’ என்று கூறும் ஒரு உறுதி உங்களுக்குள் மலரும். இதுவே நீங்கள் கொண்டிருக்க வேண்டிய தன்னம்பிக்கை. இதற்குப் பிறகு, உங்களுக்குள் இருக்கும் உண்மையை உணர்ந்து கொள்வது உங்களுக்கு எளிதாக இருக்கும். இந்த உள்ளார்ந்த ஞானம் அல்லது உண்மை, வழிகாட்டும் ஒளியைப் போலப் பிரகாசித்து, உங்ளை வாழ்க்கையில் ஒரு உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

உலகியல் பழக்கவழக்கங்கள் உங்கள் உண்மையான சுயத்தை உணர்ந்து கொள்வதிலிருந்து உங்களைத் தடுக்கும். நாம் வெளிப்படையாகச் செய்யும் சடங்குகள் சரீரத்திற்கானது. ஆனால், நாம் பெறும் தீட்சை சுயத்திற்கானதாகும். இந்த சுயத்தை எப்படி அடைவது, உலகப் பற்றுகளிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்வது, நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்வது, மற்றும் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள உதவுவது எப்படி என்பதை நான் உங்களுக்குக் காட்ட முடியும்.

நீங்கள் இந்த அகவழிப்பாதையில் பயணிக்கும் போது, அகங்காரம், கர்வம், ஆணவம் மற்றும் பொறாமை போன்ற உங்கள் எதிர்மறை குணங்கள் மறைந்து விடும். இருப்பினும், ஒரு உயர் ஆன்மிக நிலையை அடைந்தப் பிறகு, உங்களிடம் ஒரு ஆன்மிகப் போட்டி மனப்பான்மை, பெருமை மற்றும் அகங்காரம் தோன்றும். மேலும், நீங்கள் ஏதோ ஒரு மாவீரன் என்று நினைக்கத் தொடங்குவீர்கள். இந்தத் தற்பெருமை மனப்பான்மை ஆன்மிக வளர்ச்சிக்கு ஒரு தடையாகும். நீங்கள் வாழ்க்கையில் எப்போதும் எளிமையாக இருக்க வேண்டும். (...)

என்னைப் பாருங்கள்; நான் ஒரு வேலைக்காரனைப் போல நடந்து கொள்கிறேன். நேற்று நான் கடையில் அவர்களுக்குப் பொருட்களை அடுக்க உதவிக் கொண்டிருந்தேன்; இது என் வேலை அல்ல, ஆனாலும் நான் அதைச் செய்கிறேன். கழிப்பறை அடைத்துக் கொண்டால் நான் சென்று அதைச் சரிசெய் உதவுகிறேன். இந்த ஆசிரமத்தில் நான் செய்யாத வேலை என்று எதுவும் இல்லை. எல்லோரும் என்னைப் போலவே செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், நீங்கள் அப்படிச் செய்தால், அது உங்களுக்கு நல்லது. இந்த உலகில் நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், அதை அகங்காரம் இல்லாமல் செய்யுங்கள்; சுயநலமற்ற சேவை

மனப்பான்மையுடன் மற்றவர்களுக்காக அதைச் செய்யுங்கள். மேலும் அனைவரையும் உங்கள் சொந்தக் குழந்தையாகப் பாருங்கள்.

ஒருவர் உயர் நிலைக்கு முன்னேறியிருக்கலாம். ஆன்மிக ரீதியாக வளர்ந்திருக்கலாம். அல்லது ஞானம் பெற்றிருக்கலாம். ஆனாலு் இதைப் புரிந்து கொள்ளும் முதிர்ச்சி அவர்களிடம் இல்லாமல் இருக்கலாம். நான் உங்களை ஆன்மிகத்தில் ஒரு உயர் நிலைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

கடவுள் எங்கே இருக்கிறார்? கருணை எங்கே இருக்கிறது? ஞானம் எங்கே இருக்கிறது? உண்மை எங்கே இருக்கிறது? நீங்கள் தேடும் அந்த ஞானோதயம் எங்கே இருக்கிறது? உங்கள் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். அதற்காக உங்களுக்கு ஒரு செயல்முறை தேவை. மற்ற விஷயங்களில், அபிஷேகங்களும் அடங்கும் — காலையில் விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம்; மதியம் கிருஷ்ணருக்கு அபிஷேகம்; மாலையில் அன்னை பராசக்திக்கு அபிஷேகம். நமது ஆன்மிக வளர்ச்சிக்கு இந்தச் சடங்குகள் ஏன் அவசியம்?

உங்கள் மனதை ஒருமுகப்படுத்தவும், அதை ஒருமுனைப்படுத்தவும் இந்தச் சடங்குகள் அவசியம். அதைச் செய்வதற்குத் தெய்வீக சக்தி அங்கே இருக்கிறது. அது உங்களிடம் உள்ள எதிர்மறை ஆற்றல்களை நீக்கி, உங்கள் குறைகளைக் கடக்க உதவியதுடன், உங்கள் பிரச்சினைகளையும் தீர்க்கும். உங்கள் மனமம் ஒருமுகப்படும். படிப்படியாக, நீங்கள் உலக வாழ்வில் செயல்படும்போதும் இந்த ஒருமுகத்தன்மையை அடைவீர்கள்.

இந்த உலகில் நீங்கள் விரும்பியபடி எப்படி வேண்டுமானாலும் வாழலாம். ஆனால், ஒரு ஆன்மிகச் சூழலில் வாழ்வது உங்களை ஆன்மிகப் பாதைக்கு அழைத்துச் செல்ல உதவும். நீங்கள் ஒரு ஆசிரமத்தில் தங்கியிருக்கும்போது, பின்பற்ற வேண்டிய பல்வேறு ஒழுக்கங்கள் உள்ளன. அனைவருக்கும் ஒரே மாதிரியான உணவுதான் பரிமாறப்படுகிறது; நீங்கள் காலையில் சீக்கிரம் எழுந்து, குளித்து சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும். இரவு உடைகளுடனோ அல்லது அரைகுறை ஆடையுடனோ வெளியே செல்வது அதே பலனைத் தராது. காலையில் எழுந்தவுடன் நீங்கள் ஆன்மிகப் பணியைச் செய்யப் போகிறீர்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். எனவே, "ஆ, இது என் சொந்த வீடு/அறை, இங்கே நான் விரும்பியதைச் செய்யலாம்" என்று உங்கள் வீடு/அறையில் தங்கி நினைப்பது சரியல்ல. அது உங்களுக்கு நன்மை பயக்காது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இதனால்தான், வருடத்திற்கு சில வாரங்களாவது ஆசிரமத்திற்கு வருமாறு நான் பக்தர்களுக்கு அறிவுறுத்துகிறேன். நீங்கள் வந்து சில நாட்களிலேயே ஓடிப்போய் விட்டால், நான் என்ன செய்ய முடியும்?

நான் உங்கள் மீது வேலை செய்யத் தொடங்கும்போதே, நீங்கள் மீண்டும் வீட்டிற்கு ஓடிவிடுகிறீர்கள். உங்கள் சொந்த ஊருக்குத் திரும்பியதும் உங்கள் மனம் மீண்டும் அந்தச் சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும். (...) இங்கே தங்குவதன் மூலம், உங்கள் எதிர்மறை குணங்களும் எண்ணங்களும் உங்களை விட்டு விலகும் போது, நீங்கள் உள் மகிழ்ச்சியை உணரத் தொடங்குவீர்கள். காலப் போக்கில் நீங்கள் முதிர்ச்சியடைவீர்கள்.

சில நாட்கள் மட்டும் தங்கிவிட்டு நீங்கள் கிளம்பிச் சென்றால், உங்கள் பழைய பழக்கவழக்கங்களுக்கே மீண்டும் திரும்பி விடுவீர்கள். உங்களுக்குப் பிடித்தமான எதையும் சாப்பிடவும் வாங்கவும் தொடங்குவீர்கள்; எல்லாவிதமான மனிதர்களையும் சந்திப்பீர்கள். இவை அனைத்தும் உங்களைக் கெடுத்து விடும். எனவே, குறைந்தபட்சம் ஒரு நேரத்தில் ஐந்து

நாட்களகாவது ஆசிரமத்தில் தங்குங்கள். பிறகு உங்களுக்கு ஏதேனும் மாற்றங்கள் தெரிகிறதா என்று பாருங்கள்.

நேற்று நாம் ஏன் இங்கே ஒரு கடையைத் திறந்தோம் தெரியுமா? உங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக நீங்கள் திருச்சிக்குச் செல்ல வேண்டியதில்லை என்பதற்காகத்தான் — இப்போது நீங்கள் அவற்றை இங்கேயே வாங்கிக் கொள்ளலாம். புடவைகள் அல்லது செருப்புக்ள வாங்குவதற்காக திருச்சிக்கு ஓடாதீர்கள். ஏனென்றால் அவையும் கடையில் கிடைக்கின்றன. இந்த வழியில், உங்கள் உலகியல் தேவைகளையும் நான் கவனித்துக் கொள்கிறேன். அதற்காக நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை — இங்கே இருந்தாலே போதும்.

அதற்குப் பிறகு, நீங்களே பார்க்கலாம். நீங்கள் இங்கே இருக்கும்போது பழைய பக்தர்களுடன் அதிகம் பேசாதீர்கள். அவர்கள் உங்களுக்குச் சில அர்த்தமற்ற விஷயங்களைத்தான் சொல்வார்கள். அவர்கள் பத்து ஆண்டுகளாக இங்கே இருப்பதால், சுவாமி பிரேமானந்தாவைப் பற்றியும் அவருடைய செய்தியைப் பற்றியும் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்வார்கள். இது உண்மையல்ல. ஒருவர் இருபது ஆண்டுகள் தங்கியிருக்கலாம். அவரக்ள என்னை அறிந்து கொள்ள மாட்டார்கள். என்னுடன் இருபது ஆண்டுகளாக இருந்தும் கூட என்னை இன்னும் புரிந்து கொள்ளாதவர்கள் இங்கே இருக்கிறார்கள். அப்படியிருக்க பத்து ஆண்டுகள் என்பது என்ன பெரிய விஷயம்?

வித்தியாசம் என்னவென்றால், என்னால் உங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நீங்கள் என்னை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் என் பௌதீக சரீரத்தை மட்டுமே பல வழிகளில் கவனித்து வருகிறீர்கள். இது ஒரு சாதாரண சரீரமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் உங்களுக்கு மத்தியில் ஒரு சாதாரண மனிதனைப் போல் வாழ விரும்புகிறேன்.

இப்போது உங்களுக்குள் இருக்கும் ஆன்மிகத்தை/உண்மையை/தெய்வீகத்தை எப்படி அடைவது? நான் சொன்னது போல நமது மனதை வெளி உலகத்திலிருந்து ஒருமுகப்படுத்த, ஒரு ஆசிரமம் அவசியம். அங்கேதான் ஆன்மிக வாழ்விற்குத் தேவையான பழக்கவழக்கங்களை நான் வளர்த்துக் கொள்ள முடியும். நீங்கள் விரும்பியபடி வாழலாம். ஆனால் நான் உங்களுக்கு ஒரு நல்ல பாதையக் காட்டவும், நல்ல அறிவை வழங்கவும், உங்கள் பிரச்சினைகளையும் சிரமங்களையம் தீர்க்கவும் விரும்புகிறேன். அதனால் நீங்கள் இந்தப் பாதையில் திறம்பட பயணிக்க முடியும். நீங்கள் ஆசிரமத்தில் ஒரு நேரத்தில் குறைந்தபட்சம் ஐந்து அல்லது பத்து நாட்கள் தங்குமாறு நான் கேட்பதற்குக் காரணம், நான் உங்களுக்குள் இருந்து செயல்பட்டு உங்களைச் சுத்திகரிப்பதற்காகத்தான்.

ஒரு சலவைத் தொழிலாளி உங்கள் துணிகளைத் துவைத்து உங்களிடம் திருப்பித் தருவது போல, என்னாலும் உங்கள் உள்ளிருக்கும் அழுக்குகளை அடித்து, துவைத்து, பிழிந்து வெளியேற்ற முடியும். ஆனால் நீங்கள் சென்று விட்டால், நான் துவைத்துக் கொண்டிருந்த துணிகள் திடீரென்று எடுத்துச் செல்லப்பட்டது போல ஆகிவிடும். இதனால்தான் நீங்கள் ஆசிரமத்தில் குறைந்தபட்சம் சிறிது காலம் தங்குமாறு நான் அறிவுறுத்துகிறேன். வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல.

## உலகெங்குமுள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனங்கள் மற்றும் குழுக்களின் செய்திகள்

# பிரான்சின் டொர்டொக்னே பகுதியில் உள்ள பிரேமானந்தா கிளை ஸ்தாபனம், பிரேமானந்தா ஒற்றுமை கிளை ஸ்தாபனமாக மாறுகிறது

டொர்டொக்னேவிலுள்ள பிரேமானந்தா கிளை ஸ்தாபனம், உயர்தர வாழ்க்கை மற்றும் ஒரு அமைதியான சூழலை வழங்கும் மற்றும் ஆன்மிகப் பாதையில் பயணிக்கும் ஒரு பெரிய சமூகத்தைக் கொண்ட ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இந்தப் பகுதி, தங்களின் அகப் பயணங்களால் ஈர்க்கப்பட்டு, பௌத்தம், ஷாமனிசம், எஸ்சேனிய போதனைகள், சூஃபிசம், இந்து மதம் போன்ற பல்வேறு பாதைகளைப் பின்பற்றும் ஏராளமான ஆன்மிக ஆர்வலர்களை ஈர்த்துள்ளது.

சில சமயங்களில், இந்த ஆன்மிகப் பாதைகள் ஒன்றையொன்று சந்திக்கின்றன. இது ஒருவித மத ஒற்றுமைக்கான தருணங்களை உருவாக்குகிறது. உதாரணமாக, எங்கள் அபிஷேகங்களில் மற்ற புகழ்பெற்ற குருமார்களின் பக்தர்கள் தவறாமல் கலந்து கொள்கிறார்கள். மேலும், 2024 செப்டெம்பரில், உலக அமைதிக்காக ஒரு பெரிய யாகத்தை நாங்கள் ஏற்பாடு செய்தோம். அது அந்த வெவ்வேறு பாதைகளைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்தது. இதன் அடிப்படையில், எங்கள் கிளை ஸ்தாபனத்தை பிரேமானந்தா ஒற்றுமை ஸ்தாபனமாக மாற்றினால், எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் உணர்நதோம்.

இந்த ஆண்டு ஒற்றுமை ஸ்தாபனமாக மாறிய பிறகு, எங்களின் முதல் பொது நிகழ்ச்சிகளில் ஒன்று குருபூர்ணிமாவுக்காக நடத்தப்பட்டது.



கடந்த பிப்ரவரியில் கும்பாபிஷேகத்தில் நாங்கள் கலந்து கொண்டது எங்கள் கிளை ஸ்தாபனத்தின் ஒருங்கிணைப்பை மறுபரிசீலனை செய்ய எங்களைத் தூண்டியது; அதன் விளைவாக, பிரேமானந்தா ஒற்றுமை ஸ்தாபனத்தில் இப்போது அலமேலா மற்றும் திருதி என இரண்டு ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளனர். மேலும் வித்யோதா இப்போது ஆதரவுக் குழுவில் ஒரு உறுப்பினராக இருக்கிறார்.

*ஜெய் பிரேம சாந்தி!*

# இலங்கை கொழும்பு, ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனத்தில் சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

நவம்பர் 17ம் தேதி, கொழும்பு, பத்தரமுல்லையில் உள்ள எங்கள் கிளை ஸ்தாபனத்தில் சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை நாங்கள் நடத்தினோம். நாங்கள் ஒரு அற்புதமான பாதபூஜை செய்தோம். பின்னர், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் சுவாமிஜியுடன் தனக்கு எற்பட்ட சில தனிப்பட்ட அனுபவங்களை நினைவு கூர்ந்து மனம் தொட்ட சொற்பொழிவொன்றை நிகழ்ச்சினார். பக்தர்கள் தயாரித்த அழகாக அலங்கரிக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டு, பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் கொண்டாட்டங்கள் நிறைவடைந்தன.










மேல் இடது புறத்திலிருந்து கடிகாரச் சுற்றில்:

சுவாமிஜியின் பிறந்தநாளுக்காக சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட கிளை ஸ்தாபனம், திரு. விக்னேஸ்வரன் அவர்கள் சுவாமிஜியுடனான தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார், அலங்கரிக்கப்பட்ட பிறந்தநாள் கேக், பக்தர்கள் கேக்கை வெட்டுகிறார்கள்.



## ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனம், செஸ்டோசோவா, போலந்தில் சுவாமிஜியின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்







எங்கள் கொண்டாட்டம் குரு அ்'டோத்திர பாராயணத்துடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து, ஆழ்ந்த பக்தியுடன் பல பஜனைகள் பாடப்பட்டன. பக்தர்கள் அனைவரும் சுவாமிஜிக்கு இனிப்புப் பண்டங்களைக் கொண்டு வந்திருந்தனர்- அவை அன்பின் இனிமையான காணிக்கைகள்.

## ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனம், மொன்ட்பெலியலர், பிரான்ஸில் சுவாமிஜியின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள்



இந்த ஆண்டு சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை, ஆர்ல்ஸ் நகரில உள்ள மையத்தின் புதிய உறுப்பினரான வேணுவின் வீட்டில் நடத்தினோம்.

சுவாமிஜியை முதன்முறையாகச் சந்தித்தவர்கள் உட்பட 30 – க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். சுவாமிஜி நேரலையில் சத்சங்கம் வழங்குவதைக் கேட்க மக்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், 'சுவாமி பிரேமானந்தா அல்லது அன்பு செய்வதின் ஆனந்தம்' என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. அதற்குக் கிடைத்த வரவேற்பு அபரிமிதமான நேர்மறையாக இருந்தது.

சுவாமிஜி தனது பிறந்தநாட்களில் ஒன்றில் வழங்கிய ஒரு சத்சங்கத்தையும் நான் வாசித்துக் காட்டினேன். நாங்கள் பஜனைகளை பாடினோம். லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தோம். லிங்க ஆசீர்வாதங்களை வழங்கினோம். மேலும், நிச்சயமாக சுவாமிஜிக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்தோம்!



நந்தியும் நானும் ஒரு ஆச்சரியத்தையும் ஏற்பாடு செய்திருந்தோம்.

தனது பிறந்தநாளில் சுவாமிஜி சில சமயங்களில் வரவிருக்கும் ஆண்டிற்காக நாங்கள் செய்ய உத்தேசித்துள்ள உறுதி மொழிகளைப் பகிர்ந்து கொள்ளும்படி எங்களிடம் கேட்பார் என்பதை நான் நினைவு கூர்ந்தேன். பின்னர், நாங்கள் எங்கள் வாக்குறுதிகளைக் காப்பாற்றும் உறுதியான நோக்கத்துடன் எங்களுடைய வாக்குறுதிகளை எழுதி அவருக்கு அஞ்சல் மூலம் அனுப்புவோம்.

எனவே, இதை மனதில் கொண்டு, ஒன்றையொன்று பூர்த்தி செய்யும் பெண்மை ஃஆண்மை ஆற்றல்களைக் குறிக்கும் 'யின்' மற்றும் 'யாங்' சின்னங்களின் அடிப்படையில், ஒரு குறிப்பிட்ட தலைப்பில் அனைவரையும் ஜோடிகளாக இணைந்து பணியாற்ற வைக்கும் யோசனை எனக்கு வந்தது.

நாங்கள் ஒரே அளவுள்ள இரண்டு குழுக்களை உருவாக்கினோம். ஒன்று யின் — க்கும் மற்றொன்று யாங் — கிற்கும். பின்னர், நாங்கள் ஒவ்வொருவரும் யின் மற்றும் யாங் குறியீடுகள் கொண்ட பைகளை எடுத்துக்கொண்டு சுற்றிச் சென்று, ஒவ்வொருவரையும் பாதியை எடுக்கச் சொன்னோம். அந்தத் தொகுப்பை முழுமையாக்க, தங்கள் மற்ற பாதியைக் கண்டுபிடிப்பதே இதன் நோக்கம்; இதற்காக, நாங்கள் அதற்கேற்ற வண்ணப் புள்ளிகளை வைத்திருந்தோம்.

ஜோடிகள் மீண்டும் ஒன்று சேர்ந்ததும், அந்த இரண்டு பகுதிகளிலும் எழுதப்பட்டிருந்தவற்றை ஒவ்வொருவராகப் படிக்கச் சொன்னேன். அதில், "சேவை, தோட்டக்கலை, பூச்செடிகள் நடுதல், ஆன்மிகத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல், ஒரு பழக்கத்திலிருந்து விடுபடுதல், அபிஷேகங்களைக் கற்றுக் கொள்ளுதல், பஜனைகள் பாடுதல்" போன்ற வார்த்தைகள் இருந்தன. உண்மையில், சுவாமிக்கு முன்னாலும், அங்கிருந்தவர்கள் முன்னாலும், அந்த ஆண்டில் ஜோடிகளாகச் சேர்ந்து, படித்தவற்றில் பரிந்துரைக்கப்பட்டவற்றைச் செய்வதாக உறுதியளிப்பதற்காக ஒரு வழியாகவும் இது இருந்தது. இதன் மூலம், மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் அனுமதிப்பதே இதன் நோக்கமாகும்.

இவற்றைத் தயாரிக்கும் போது, ஆகஸ்ட் 2026 — ம் ஆண்டின் இறுதியில் மார்டிக்யூஸில் திட்டமிடப்பட்டிருந்த வரவிருக்கும் சந்திப்பையும் நான் மனதில் கொண்டிருந்தேன். மேலும், மக்களை இப்போதே சுறுசுறுப்பாக பங்கேற்கச் செய்வதற்கு இது ஒரு நல்ல வழியாக எனக்குத் தோன்றியது. மொத்தத்தில், சுவாமிஜியால் ஆசீர்வதிக்கப்பட்ட, அவருடைய அளவற்ற கருணையால் நிரம்பிய ஒரு மிக அழகான நிகழ்ச்சியை நாங்கள் நடத்தினோம்!

*ஜெய் பிரேம சாந்தி!*
*பரமேஸ்வரி*

# ஆசிரமத்தில் சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள்

நமது அன்புக்குரிய சுவாமிஜியின் 74வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அனைத்து பக்தர்களின் நலனுக்காக நடத்தப்பட்ட கணபதி யாகத்துடன் நவம்பர் 17ம் தேதி அதிகாலையில் தொடங்கின. அதைத் தொடர்ந்து, அவரது சமாதி லிங்கத்திற்கு மிகுந்த பக்தியுடன் அபிஷேகம் செய்யப்பட்டது.








காலை 9.30 மணிக்கு சுவாமிஜியின் சிலையுடன் எழுச்சியூட்டும் மந்திரங்கள் மற்றும் பஜனைகளுடன் ஆசிரமத்தைச் சுற்றி ஒரு மகிழ்ச்சியான ஊர்வலம் நடைபெற்றது.




காலை 11.30 மணிக்கு ஒவ்வொரு பக்தரும் அன்பான பக்தியுடன் ஒரு கோப்பை பாலை ஊற்றி, சுவாமிஜியின் சிலைக்குப் பாலாபிஷேகம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஒரு விழா விருந்தும் இனிப்புப் பலகாரமும் வழங்கப்பட்டது.

# சுவாமிஜியுடன் எனது அனுபவங்கள்

**2025ம் ஆண்டு நவம்பர் 17ம் தேதி, இலங்கையின் கொழும்பு, பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீ பிரேமானந்தா கிளை ஸ்தாபனத்தில் நடைபெற்ற சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டங்களின் போது, நீதிபதி திரு. சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் சுவாமிஜியுடனான தனது அனுபவங்களை அனைவரிடமும் பகிர்ந்து கொண்டார்.**

அனைவருக்கும் வணக்கம்!

இதுபோன்ற பஜனை கூட்டங்களில் நான் பேசி நீண்ட காலமாகி விட்டது. இதுபோன்ற கூட்டங்களில் நான் கடைசியாக பேசி பல ஆண்டுகள் கடந்துவிட்டன! இந்த ஆண்டு சுவாமிஜியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இன்று சுவாமிஜியின் 74வது பிறந்தநாள் என்று நான் நம்புகிறேன். என் குடும்பம் 1981ம் ஆண்டில் சுவாமிஜியைப் பற்றி அறிந்து கொண்டது. அன்று முதல், அவருடன் அல்லது அவர் மூலமாக எங்களுக்குப் பல அனுபவங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



அப்போது நான் அனுராதபுரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தேன். எனது உத்தியோகபூர்வ நீதிபதி குடியிருப்பு நுவரவேவா குளத்தின் ஓரத்தில் அமைந்திருந்தது. அப்போது என் குடும்பம் கொழும்பில் இருந்தது. ஒரு மதியம் நான் எனது குடியிருப்பிலிருந்து நுவரவேவா குளத்தைப் பார்த்தபோது, ஏராளமான குழந்தைகளும் பெரியவர்களும் குளத்தில் குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். எனது பாதுகாப்புக் காவலர்கள் மதிய உணவிற்காகச் சென்றிருந்தனர்.

நான் தனியாக இருந்தேன். ‘நாமும் ஏன் குளத்தில் குளிக்கக் கூடாது?’ என்று எனக்கு நானே எண்ணிக் கொண்டேன்.

அதனால் நான் தயாராகி குளத்திற்குச் சென்று, அதில் இறங்கினேன். நான் குளத்தில் இறங்கிய இடத்திலிருந்து சற்று தொலைவில் நிறைய குழந்தைகள் குளித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று நான் சுமார் 17 அடி ஆழமுள்ள சேற்று நீரில் மூழ்கி விட்டேன். ஆனால் நான் பீதியடையவில்லை. நான் சாதாரணமாக மேலே வந்து, நீந்தி, கரைக்கு ஏறி வந்தேன். அது என் இயல்புக்கு முற்றிலும் மாறானது. ஆழமான நீரினைக் கண்டு பயப்படும் பழக்கம் எனக்குண்டு. அப்போது ஒருவர் என்னை நோக்கி ஓடி வந்து சிங்களத்தில், “ஐயா, கடந்த மாதம் இங்கு ஒருவர் நீரில் மூழ்கி இறந்து போனது உங்களுக்குத் தெரியாதா? இந்தக் குழி 17 அடி ஆழம் கொண்டது. இவர்கள் இங்கு மணல் அள்ளிவிட்டு, குழிகளை மூடாமல் அப்படியே விட்டு விட்டார்கள். மழை வந்தபோது, இந்தக் குழிகள் நீரால் நிரம்பி விட்டன. எங்கள் குழந்தைகளுக்கு இது போன்ற அபாயகரமான இடங்கள் இருப்பது தெரியும். அதனால் அவர்கள் அவற்றைத் தவிர்த்து விடுவார்கள். நீங்கள் இங்கு காலடி எடுத்து வைக்க முயன்றதைப் பார்த்து, நீங்கள் குழிக்குள் விழுந்து விடக் கூடாது என்பதற்காக நான் கத்தினேன். ஆனால், உங்களுக்குக் கேட்கவில்லை; நான் மிகவும் தொலைவில் இருந்தேன். நீரின் சேற்றுத்தன்மை காரணமாக மக்கள் மூச்சுத்திணறி இறந்து விடுகிறார்கள். ஆனால் நீங்கள் எந்தப் பாதிப்பும் இல்லாமல் மேலே வந்து விட்டீர்கள்!” என்றார்.

அப்பொழுது எனக்கு சுவாமிஜியின் நினைவு வந்தது. அவர்தான் எனக்கு உதவியிருக்கிறார் என்று நான் நினைத்தேன். அவருடைய ஆசீர்வாதம் இல்லையென்றால், நான் நிச்சயம் பீதியடைந்திருப்பேன் அல்லது என் வாயில் நிறைய கலங்கிய நீரை விழுங்கியிருப்பேன். இந்தச் சம்பவம் எங்கள் குடும்ப உறுப்பினர்களை சுவாமிஜியை நன்றியுடன் நினைவுகூரச் செய்தது. இது முற்றிலும் அதிர்ஷ்டம் என்றும், இதற்கும் சுவாமிஜிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால், நாங்கள் பின்னர் சந்தித்தபோது, எங்கள் வாழ்க்கையில் முன்பு நடந்ததை நினைவூட்டுவதற்கு சுவாமிஜிக்கு ஒரு நுட்பமான வழி இருந்தது. அதன் மூலம், அவருக்கு எல்லாம் தெரியும் அல்லது அவரே எல்லாவற்றையும் கவனித்துகொள்கிறார் என்ற நம்பிக்கையை அவர் எங்களுக்கு ஏற்படுத்தினார்!

நிச்சயமாக, அடுத்த நாள் உயர்நீதிமன்ற நீதிபதி என்ற முறையில், நான் அந்த ஆழமான பள்ளங்களுக்கு அருகில், ‘ஆபத்து – எச்சரிக்கை’ பலகைகளைச் செய்து வைத்தேன்.

சுவாமிஜியின் வாழ்க்கை சில வழிகளில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை ஒத்திருந்தது. இயேசு அநியாயமாகக் குற்றவாளியாகக் கருதப்பட்டு, பின்னர் சிலுவையில் அறையப்பட்டார். சுவாமிஜியும் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டு, நீண்ட சிறைத் தண்டனையை எதிர்கொண்டார். இயேசு மற்றவர்களுக்காகத்தன் உயிரைத் தியாகம் செய்தார். சுவாமிஜியின் துன்பங்கள் அவருடைய சொந்த நலனுக்காக அல்லாமல், மனிதகுலத்தின் சார்பாகவே அனுபவிக்கப்பட்டன. இயேசு சிலுவையில் அறையப்பட்ட மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். சுவாமிஜி சிறையில் இருந்தபோதே, ஒரு வெள்ளிக்கிழமை மாலை வண்டிபாளையம் அம்மன் கோவிலில் அவர் காணப்பட்டார்! இயேசுவின் பெயர் இப்போது 2025 ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது. எதிர்காலத்திலும் அவருடைய பெயர் நினைவு கூரப்படும். சுவாமிஜி தனது பெயர் 2500 ஆண்டுகளுக்கும் மேலாக நினைவுகூரப்படும் என்று நம்மிடம் கூறியுள்ளார். இப்போது நமக்கு மிகக் குறைவான பக்தர்களே இருக்கும்போது, இது எப்படி சாத்தியம் என்று நீங்கள் கேட்கலாம்.

ஒருமுறை நான் சுவிட்சர்லாந்தில் உள்ள சுவாமிஜியின் சில பக்தர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன். நான் அவர்கள் வீட்டிற்குச் சென்ற போது, அவர்கள் அபிஷேகம் செய்து கொண்டிருந்தார்கள். நான் உள்ளே சென்றபோது, அவர்களில் ஒருவர் கூட என்னைப் பார்த்துத் தலையைக் கூட அசைக்கவில்லை. அவர்கள் அனைவரும் பக்தியுடன் அபிஷேகத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தனர். இதுபோன்ற பக்தியை நம்மிடையே காண்பது அரிது.

அபிஷேகம் முடிந்தப் பிறகுதான், அவர்கள் அனைவரும் என்னிடம் வந்து, "வணக்கம் ஐயா, எப்படி இருக்கிறீர்கள்?" என்றெல்லாம் கேட்டு மிகுந்த உற்சாகத்துடன் என்னை வரவேற்றார்கள். நாம் பூஜை அல்லது அபிஷேகம் செய்யும்போது, உள்ளே வரும் ஒருவரைப் பார்த்தால், குறைந்தபட்சம் தலையாவது அசைப்போம் அல்லவா! ஆனால் அவர்கள் அனைவரும் முழுமையான கவனத்துடனும் பக்தியுடனும் இருந்தார்கள்.

சுவாமிஜியின் நினைவுகள் நம்மால் மட்டுமல்லாமல் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த அவரது பக்தர்களால் பக்தியுடன் பாதுகாக்கப்படும் என்ற உணர்வினால் நான் இந்தச் சம்பவத்தைக் கூறுகிறேன். நாம், அதாவது இலங்கை மற்றும் இந்தியர்கள் அவரை மறந்தாலும், அத்தகைய பாதுகாப்பு சுவாமிஜியின் பெயரை 2500 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்திருக்கச் செய்யும்.

சுவாமிஜி மற்ற குருமார்களைப் போன்றவரல்ல. அவருடைய முக்கிய உபதேசம், 'மகிழ்ச்சியாக இருங்கள்!' அதாவது 'உங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். அவற்றிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாக இருங்கள். நான் உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பேன்.' என்பதே இதன்பொருள். இது முற்றிலும் உண்மை. நாங்கள் எங்கள் பிரச்சினைகள் அனைத்தையும் சுவாமிஜியிடம் ஒப்படைத்து விட்டு, அவர் மூலமாகவோ அல்லது அவர ஆசீர்வாதங்கள் மூலமாகவோ எங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று காத்திருக்கப் பழகி விட்டோம்! அன்பான பக்தர்களே! அவரை நம்பிக்கையுடனும் அன்புடனும் நினைவுகூர்வோம்! அதற்குப் பதிலாக அவர் நமது லௌகீக மற்றும் ஆன்மிகப் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்வார்!

சுவாமிஜியைப் பற்றி எடுத்துரைக்கத் தகுந்த பல சம்பவங்கள் எங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளன. அவற்றில் ஒன்றை நான் குறிப்பிடுகிறேன்.

1987ம் ஆண்டு அக்டோபர் 23ம் தேதி எனக்குப் பிறந்தநாள். அப்போது நாங்கள் கொழும்பு 5ல் உள்ள சம்மிட் பிளாட்சில் வசித்து வந்தோம். என் மனைவி இந்திரா ஒரு சைவப் பிறந்தநாள் கேக் செய்திருந்தார். அன்று சுவாமி எங்களைப் பார்க்க் வந்திருந்தார். 'ஹேப்பி பர்த்டே டு யூ' என்ற

வாழ்த்து முழக்கங்களுக்கு மத்தியில் நான் கேக்கை வெட்டத் தயாரானேன். அப்போது சுவாமிஜி என்னை எச்சரித்தார் – "கவனமாக இருங்கள். அந்தக் கேக்கிற்குள் ஏதோ இருக்கிறது. நடுப்பகுதியின் இருபுறமும் வெட்டி, அதை வெளியே எடுங்கள். "நான் அப்படியே செய்தேன்." அதைச் சோதித்துப் பாருங்கள்" என்றார் அவர். அதற்குள் ஒரு சிறிய விநாயகர் சிலை இருப்பதைக் கண்டேன்! பிறகு, மறுபுறம் வெட்டி அதேபோல் செய்யும்படி அவர் என்னிடம் கூறினார். அங்கே ஒரு அம்மன் சிலை இருப்பதைக் கண்டேன்! அதேபோல், மற்றொரு முறை வெட்டியபோது ஒரு பாலகிருஷ்ணன் சிலை கிடைத்தது. அந்தச் சிலைகள் சுவாமிஜியிடம் கொடுக்கப்பட்டன. அவர் அம்மன் சிலையை என்னிடமும், விநாயகர் சிலையை இந்திராவிடமும், கிருஷ்ணர் சிலையை என் மூத்த மகன் நிர்மலகுஹனிடம் கொடுத்தார்.



திரு. சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் சுவாமிஜியுடனான தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்

அந்த நேரத்தில் எனக்கு ஆறு வயது இளைய மகன் மாடியில் தூங்கிக் கொண்டிருந்தான். என் மனைவி இந்திரா, சுவாமிஜி என் இரண்டாவது மகன் யௌவனகுஹனுக்கு எதுவும் கொடுக்கவில்லை என்று அவரிடம் முறையிட்டாள். சுவாமிஜியின் கட்டளைப்படி யௌவனகுஹன் எழுப்பப்பட்டு கீழே அழைத்து வரப்பட்டான். சுவாமி என் இரண்டாவது மகனின் உள்ளங்கைகளுக்கு இடையில் சில பூக்களை வைத்து, தனது உள்ளங்கைகளால், அவனது உள்ளங்கைகளை மூடினார். பிறகு, அவர்கள் இருவரும் தங்கள் உள்ளங்கைகளைத் திறந்தபோது, அங்கே ஒரு சிவலிங்கச் சிலை இருந்தது. மற்றவர்களுக்கு கடவுள் சிலைகள் கொடுக்கப்பட்டிருக்க, தனக்கு மட்டும் ஒரு கேத்தல் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறி யௌவனன் அழத் தொடங்கினான்! பிறகு, அந்தச் சிலைகள் எல்லாவற்றிலும் சிவலிங்கம் தான் மிகவும் ச்கதி வாய்ந்தது என்று அவனது தாய் அவனுக்கு விளக்க வேண்டியிருந்தது.

இன்றுவரை நான் இந்தச் சிலைகள் அனைத்திற்கும் தினமும் பூஜை செய்து வருகிறேன். நிச்சயமாக, அந்தப் பாலகிருஷ்ணன் சிலை பின்னர், புளியங்குளம் பூபாலகிருஷ்ணன் ஆசிரமத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டு, அந்த ஆலயம் கட்டப்பட்டபோது அதன் அடிக்கற்களுக்கு மத்தியில் வைக்கப்பட்டது.

சுவாமிஜியின் ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டுமென்றால், நீங்கள் அவரை உணர வேண்டும்! அவரைப் பற்றி மட்டும் நினைக்காதீர்கள்! அவரை உணருங்கள்! அவர் எப்போதும் உங்கள் பக்கத்திலேயே இருப்பார். அவரிடம் எந்தக் கேள்வியையும் கேளுங்கள். அவர் அவற்றுக்கு பதிலளிப்பார்! நிச்சயமாக, அந்தப் பதில்கள் உங்கள் மனதிலிருந்துதான் வரும். ஆனால், அவை உங்கள் மனதின் கற்பனைகள் அல்ல. அவை அவருடைய பதில்களே! அவர் பதிலளிக்கத் தாமதமானால், அதற்கு ஒரு காரணம் இருக்கும். ஆனால் அவர் நீங்கள் சொல்வதைக் கேட்கிறார் என்றும், உங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பார் என்றும் நம்பிக்கைக் கொள்ளுங்கள்.

இந்த மங்களகரமான நாளில் நாம் அனைவரும் அவரை நினைவு கூர்ந்து, நம் ஒவ்வொருவரின் விருப்பங்களையும் அவர் நிறைவேற்ற வேண்டும் என்று அவரிடம் பிரார்த்திப்போம்!

*ஜெய் பிரேம சாந்தி!*

# ஆசிரம விழாக்கள் நாட்காட்டி 2025

***இந்த நாட்காட்டியை நீங்கள் எப்பொழுதும் www.sripremananda.org/calendar என்ற வலைதளத்தில் பார்க்கலாம்***

**ஜனவரி 2026**

1 பிரேமானந்தா தினம், மாதசிவராத்திரி
2 பௌர்ணமி
15 பொங்கல்
16 மாட்டுப் பொங்கல்
17 மாதசிவராத்திரி
30,31 ஸ்ரீ பிரேமேஸ்வரர் ஆலய வருஷாபிஷேகம்

**பிப்ரவரி 2026**

1 பௌர்ணமி
15 மகாசிவராத்திரி
21 சுவாமிஜியின் மஹாசமாதி நாள்
26 மகாசிவராத்திரி

**மார்ச் 2026**

2 பௌர்ணமி
05 15வது குருபூஜை
10 சுவாமிஜியின் தாயார் ஜெயந்தி
17 மாதசிவராத்திரி

**ஏப்ரல் 2026**

1 பௌர்ணமி
4 பிரேமானந்தா பெற்றோர் தினம்
14 தமிழ் புத்தாண்டு
15 சுவாமிஜியின் தாயாரின் நினைவு நாள்/ மாதசிவராத்திரி

**மே 2026**

1 புத்த பூர்ணிமா (வெசாக்)/பௌர்ணமி
25 மாதசிவராத்திரி
30 பௌர்ணமி

**ஜூன் 2026**

13 மாதசிவராத்திரி
29 பௌர்ணமி

**ஜூலை 2026**

12 மாதசிவராத்திரி
29 குரு பூர்ணிமா/ பௌர்ணமி

**ஆகஸ்ட் 2026**

11 மாதசிவராத்திரி
27 பௌர்ணமி

**செப்டம்பர் 2026**

4 கிருஷ்ண ஜெயந்தி
9 மாதசிவராத்திரி
14 விநாயகச் சதுர்த்தி

**அக்டோபர் 2026**

8 மாதசிவராத்திரி
11 நவராத்திரி ஆரம்பம்
19 சரஸ்வதி பூஜை
20 விஜயதசமி (நவராத்திரி முடிவு)
25 பௌர்ணமி/ அன்னாபிஷேகம்

**நவம்பர் 2026**

7 மாதசிவராத்திரி
8 தீபாவளி
10 ஸ்கந்தசஷ்டி ஆரம்பம்
15 ஸ்கந்தசஷ்டி நிறைவு
17 சுவாமிஜியின் 75வது ஜெயந்தி விழா
18 ஆசிரமம் 37வது ஆண்டு விழா/
24 கார்த்திகை தீபம்/பௌர்ணமி

**டிசம்பர் 2025**

7 சங்காபிஷேகம் /மாதசிவராத்திரி
23 பௌர்ணமி
25 கிறிஸ்துமஸ்

**தினசரி அபிஷேகம் மற்றும் பூஜைகளுடன் கீழ்காணும் ஸ்ரீ பிரேமேஸ்வரர் ஆலய அபிஷேகங்களும் நடைபெறும்:**

பிரதோஷத்தன்று நந்தி அபிஷேகம்:
ஜனவரி 1, 16, 30, பிப்ரவரி 14, மார்ச் 1, 16, 30, ஏப்ரல் 15, 29, மே 14, 28 ஜூன் 12, 27, ஜூலை 12, 26, ஆகஸ்ட் 10, 25, செப்டம்பர் 8, 24 அக்டோபர் 8, 23, நவம்பர் 6, 22 டிசம்பர் 6, 21.

சுவாமிஜியின் ஜென்ம நட்சத்திரத்தன்று சுவாமிஜியின் சிலைக்கு அபிஷேகம்-
ஜனவரி 2, 30 பிப்ரவரி 26 மார்ச் 25, ஏப்ரல் 22, மே 19, ஜூன் 16, ஜூலை 13 ஆகஸ்ட் 9, செப்டம்பர் 6, அக்டோபர் 3, 30, நவம்பர் 27, டிசம்பர் 24.

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகர் அபிஷேகம்:
ஜனவரி 6, பிப்ரவரி 5, மார்ச் 6, ஏப்ரல் 5, மே 5, ஜூன் 4, ஜூலை 3, ஆகஸ்ட் 2, 31, செப்டம்பர் 29, அக்டோபர் 29, நவம்பர் 27, டிசம்பர் 27.

சஷ்டியன்று முருகன் அபிஷேகம்:
ஜனவரி 24, பிப்ரவரி 22, மார்ச் 24, ஏப்ரல் 22, மே 21, ஜூன் 20, 30, ஜூலை 19, ஆகஸ்ட் 18, செப்டம்பர் 16, அக்டோபர் 16, நவம்பர் 15, டிசம்பர் 14.

தேய்பிறை அஷ்டமியன்று பைரவர் அபிஷேகம்:
ஜனவரி 10, பிப்ரவரி 9, மார்ச் 11, ஏப்ரல் 10, மே 9, ஜூன் 8, ஜூலை 7, ஆகஸ்ட் 5, செப்டம்பர் 4, அக்டோபர் 3, நவம்பர் 1, டிசம்பர் 1.

## இளைஞர் சங்கச் செய்திகள்...

Premananda International Youth

# பிரேமானந்தா இளைஞர் குழு, ஆசிரமம்



கார்த்திகை தீபம் என்பது தென்னிந்தியர்களால் முக்கியமாகக் கொண்டாடப்படும் ஒரு ஒளித் திருவிழாவாகும். இது சிவபெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விழாவாகும். இருளின் மீது ஒளியின் வெற்றியையும், அறியாமையின் மீது ஞானத்தின் வெற்றியையும் குறிக்கும வகையிலும், செழிப்பைக் கொண்டு வருவதற்காகவும் வீடுகள், கோவில்கள் மற்றும் தெருக்களில் எண்ணற்ற எண்ணெய் விளக்குகளை ஏற்றுவது இந்த விழாவின் முக்கிய அம்சாகும்.





டிசம்பர் 3ம் தேதி, கனமழைக்குப் பிறகு, ஆசிரம இளைஞர்கள் நூற்றுக்கணக்கான பாரம்பரிய அகல் விளக்குகளால், அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ பிரேமேஸ்வரர் கோவிலில் முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து, கார்த்திகேயனின் பிறப்பைக் கொண்டாடினர்.

## ஒவ்வொரு மாதமும் பிரேமானந்தா இளைஞர் சங்கத்தினரின் சிறப்புப் பண்பொன்றினை முன்னிலைப்படுத்தி வருகிறோம்.

### இம்மாதம்:

## சமமான மனநிலையுடன் இருங்கள் மற்றும் உங்கள் எண்ணங்களை இறைவன் மீது வையுங்கள்

நீங்கள் திருமணமானவராக இருந்தாலும் சரி, திருமணமாகதவர்களாக இருந்தாலும் சரி, உங்கள் மீது எனக்கு ஒரே கடமைத்தான் உள்ளது. நீங்கள் இறைவனை உணர்ந்து கொள்ள உதவுவதற்கு நான் என்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். நீங்கள் இந்த ஜென்மத்திலேயே இறைவனை உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் உண்மையாகவே விரும்புகிறேன். அடுத்த ஜென்மத்தில் அல்ல நீங்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் வாழப் போகிறீர்கள்? உங்கள் மரணத்திற்குள் நீங்கள் ஒரு குடும்ப வாழ்க்கையை வாழ விரும்பினால், உங்கள் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவும் வகையில் அந்த வாழ்க்கை மூலமாகவே நான் உங்களுக்குப் பயிற்சி அளிப்பேன். குடும்ப வாழ்க்கை வாழ்வது நான் உங்களுக்குப் பயிற்சி அளிப்பேன். குடும்ப வாழ்க்கை என்பது ஆன்மிகத்தில் முன்னேறுவதற்கு எளிமையான வழியாகும். ஆனால் உங்கள் பற்றுகள் அனைத்தையும் நீங்கள் மறக்க வேண்டும். ஒரு குடும்ப வாழ்க்கையிலும் சரி, முற்றிலும் ஆன்மிக வாழ்க்கை வாழ்வதிலும் சரி, எப்போதும் தொந்தரவுகளும் மன உளைச்சல்களும் இருக்கத்தான் செய்யும். உங்கள் நிலைமை எப்படி இருந்தாலும், சமமான மனநிலையுடன் இருக்கக் கற்றுக் கொண்டு, உங்கள் எண்ணங்களை இறைவன் மீது நிலை நிறுத்துங்கள்.

